drop-outs. I was with him. He selected 3 villages for this work. He said that he had discussed with the District Collector and prepared proposals. He told me that he would send the proposals to the State Government. May I know whether the Government have received a copy of the proposals?

THE HON. THIRU S. MADHAVAN : It is an information to the Government.

கோவை மாவட்டத்தில் பின்தங்கியவர்களுக்கு தொழில் பயிற்சி

*271 வினா—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பின்தங்கியவர்களுக்காக தொழில் பயிற்சிக் கூடங்கள் ஏதேனும் அரசு அமைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பின்தங்கிய மக்கள் நிறையபேர் படித்துவிட்டு வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க தொழில் பயிற்சிக் கூடங்களை ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்பயிற்சிக் கூடங்களிலே படித்து விட்டுத்தான் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அம்மாதிரி தொழிற் பயிற்சிக் கூடங்கள் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திருச்சி மாவட்டத்தில் கனிவளங்கள்

*272 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் கனிவளங்கள் உள்ளன என்று ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஓர் அறிக்கை @ அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில், கடலூர் பகுதியில் புதிய ரக கனிவளம் கிடைப்பதாக ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அதை விரைவுபடுத்தி, அந்தப் பகுதியில் ஒரு சிறு தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட தகவல் வருமானால் பரிசீலிக்கப்படும்.

அலுமினியம் தொழிற்சாலை

*273 வினா—திரு. துரைமுருகன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் துறையிலோ அன்றி பொதுத்துறையிலோ அலுமினிய தொழிற்சாலை தமிழ்நாட்டில் அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

@ 171-173-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அலுமினியப் பாத்திரங்களை ஏழைகள் பயன்படுத்துகிறார்கள். பணக்காரர்கள் எவர்சில்வர் பாத்திரங்களைப் பயன் படுத்துகிறார்கள். எனவே அதிகமான அலுமினியம் உற்பத்தி செய்வதற்கு தனியார் துறையில் இல்லாவிட்டாலும், பொதுத்துறையிலாவது, ஏழை மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இப்போது தமிழ்நாட்டில் 25 ஆயிரம் டன் அலுமினியம் உற்பத்தி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்குத் தேவையான அலுமினிய பாக்ஸைட்தான் கிடைத்து வருகிறது. அதுவும் இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள் களை வெளி மாநிலங்களிலிருந்துதான் பெறவேண்டியதிருக்கிறது.

திருமணத்திற்கான குறைந்த வயது வரம்பு

*274 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமணம் செய்து கொள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் குறைந்த பட்ச வயது நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, குறைந்தபட்ச வயதை நிர்ணயம் செய்வதன் மூலம் குழந்தைகள் பெறுவது குறையும் என்று அறிஞர்கள் சொல்கிறார்களே, அதை ஏற்று, திருமண வயதை நிர்ணயம் செய்ய அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 1955-ம் ஆண்டு திருமணச் சட்டப்படி, திருமண வயது ஆண்களுக்கு 18 என்றும், பெண்களுக்கு 15 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது மத்திய அரசு திருமண வயதை ஆண்களுக்கு 21 என்றும், பெண்களுக்கு 18 என்றும் உயர்த்தலாமா என்று கேட்டிருந்தார்கள். அவ்வாறு நிர்ணயித்தால் நலமாக இருக்கும் என்று கருதி, அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 21, 18 என்று வயதை உயர்த்தினாலும் கூட, இப்போது இரண்டு நிமிடங்களுக்கு மூன்று குழந்தைகள் என்ற விதத்தில் குழந்தைகள் பிறந்துகொண்டிருக்கின்றன. இந்த வயது நிர்ணயத்தைக் கொஞ்சம் தள்ளிப்போட்டால் பிறப்பு விகிதத்தை இன்னும் தடுக்க முடியும். எனவே 21 வயது என்றிருப்பதை 25-ஆக உயர்த்துவதற்கு நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் அதற்கு மத்திய அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறது. இதற்கிடையில் இன்னும் கொஞ்சம் தள்ளிப் போடுவது என்பது இப்போது முடியுமா? வயதானவர்களுக்கும் குழந்தைகள் பிறக்கின்றன.